**கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் -2020**

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என தற்போது அறியப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல்-பி 99 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் சிறந்த சுகாதார வசதிகளின் புனரமைப்பு உள்ளடங்கலாக கண்டி நகரத்தில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் என்பவற்றிற்காக முறையான முறைமையொன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிறந்த சுகாதார வசதிகள் ஊடாக வாழ்க்கைச் சூழல் மற்றும் மகாவலி ஆற்றின் தண்ணீர் தரத்தினை முன்னேற்றுதல் அதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நல்ல நிலையை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 21,982 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 17,278 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 17,922 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 14,087 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 4,060 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,191 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 செப்தெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் ரூபா 17,232 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், நேரொத்த நடைபெறும் வேலைகளின் பெறுமதி ரூபா 16,783 மில்லியனாகும். செயற்திட்டமானது இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டு ரூபா 449 மில்லியன் வித்தியாசம் இனங்காணப்பட்ட போதிலும் செயற்திட்டத்தால் வித்தியாசத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | SL-P90 மற்றும் SL-P 99 ஆம் இலக்க கடனின் கீழ் செயற்திட்டத்தால் மேற்கொண்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் மற்றும் 2018 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் ஏற்பட்ட செலவினம் என்பன தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான நடைபெறும் வேலை நடவடிக்கைகளாகவிருந்த ரூபா 17,232 மில்லியன் தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | வித்தியாசங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் ரூபா 387 மில்லியன் தொகையான மொத்த சம்பளம் நிதிக்கூற்றுக்களின் இலங்கை அரசாங்க நிதியளிப்பு வளத்தின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2020.12.31 இல் உள்ளவாறு செயற்திட்ட உத்தியோகத்தர் தொடர்பாக தலைமை அலுவலகத்தால் செலுத்தப்பட்ட ரூபா 387 மில்லியன் தொகையான சம்பளங்கள் தலைமை அலுவலகத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தது. எனவே, அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதியளிப்பு வகுதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| நடவடிக்கைகள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் | உள்ளபடியான செயலாற்றல் | | |
| (அ) வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் | | | | |
| - உட்பகுதி கழிவு வலையமைப்பு | | | நில அளவு மற்றும் பாரிய போக்குவரத்து என்பவற்றிலுள்ள பிரச்சனைகள் காரணமாக தாமதப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடைய தாமதம் கவனத்திற் கொள்ளப்பட்டதுடன் தாமதக் காட்டணம் பெறுவதற்காக (LD) அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2021 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தகாரர் உடன்பட்டு DAB தீர்மானம் எடுக்கப் பட்டமையால் தாமதக் கட்டணம் விதிக்கப்படவில்லை. | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| - திறந்த வெளி | 6.23km | 4.5km | | |
| - அகழி | 2.87km | 2.65km | | |
| - கிளைக் கழிவு வலையமைப்பு | | | | |
| - திறந்த வெளி | 71.1 கி.மீ | 65.3 கி.மீ | | |
| - அகழி | 5.7 கி.மீ | 0.82 கி.மீ | | |
| - வீட்டுக் கழிவு வலையமைப்பு | | | | |
| - திறந்த வெளி | 145.2 கி.மீ | 141 கி.மீ | | |
| - அகழி | 11.24 கி.மீ | 1.8 கி.மீ | | |
| - பதவியணி பராமரிப்பு | | | | |
| - திறந்த வெளி | 3.18 கி.மீ | 2.93 கி.மீ | | |
| - அகழி | 173 மீ | 17 மீ | | |
| - ஆட்புல இறைக்கும் இல்லம் | 09 எண் | செயற்பாட்டிலுள்ள 06 இல் 03 எண் | | |
| (ஆ) வீட்டு இணைப்பு நிர்மாணம் | | | ஒப்பந்தகாரருடைய செயலாற்றலால் IPC தாமதம் நிகழ்ந்தது. அதிகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| - நிர்மாணம் | 6,191 | 4,470 | | |
| - இறுதி இணைப்பு | 3,297 | 971 | | |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் கடன் அறவீடு 2020 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் என்பன காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனளிக்கும் முகவருக்கு கடனறவீடாக ரூபா 803.40 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. | அமுலாக்கல் முகவரின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தாமதமில்லாமல் செயற்திட்ட செயலாற்றலை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.. |
| (ஆ) | நலிவான செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் உடன்பட்ட கால அட்டவணையில் கடன் பயன்படுத்தாமை என்பன காரணமாக 2020 திசெம்பர் 31 வரை ரூபா 165.32 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தின் கருத்துகள் பெறப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

### 3.3 முரணான நடவடிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்ட நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்காத பேராதனை பல்கலைக்கழகத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறி நிர்மாணத்திற்காக இலங்கை அரசாங்க நிதிகளிலிருந்து ரூபா 288,000 தொகையை செயற்திட்டம் செலவழித்திருந்தது. | இது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் மூலம் திருத்தப்படும். | செயற்த்திட்ட நோக்கெல்லைக்குள் கொடுப்பனவைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் தேசத்தை கட்யெழுப்புதல் வரி (NBT) முறையே ரூபா 55.52 மில்லியன் மற்றும் ரூபா 7.51 மில்லியன் செலுத்த வேண்டியஇருந்தன. எவ்வாறாயினும், ரூபா 49.64 மில்லியன் மற்றும் ரூபா 7.5 மில்லியன் தொகையான முறையே மற்றும் என்பன உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக செயற்திட்டத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் To/BE03/05/01/03 (2011-166) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ரூபா 34,316,472.23 தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன் மிகுதி தொகை 2021 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்படும். | தாமதமில்லாமல் மிகுதி கொடுப்பனவை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதான செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை உள்ளக கணக்காய்வுக்கு உட்படுத்தப் பட்டிருக்காததுடன் 2016 யூன் மாதத்தின் 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளர் செர்க்கப்பட்ருக்கவில்லை. | தலைமை அலுவலகம் உள்ளக கணக்காய்வாளர் நியமனத்தை கையாள்வதுடன் 2019 ஆம் ஆண்டு தொடர்பான ஆவணங்கள் உள்ளக கணக்காய்வாளரால் கோரப்பட்டு உரிய ஆவணங்கள் உள்ளக கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்டது. | உள்ளக கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கடாதிருந்த விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|
| தெய்யன்னெவெலவில் இறைக்கும் இல்லத்தின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் மஹாமய ஆரம்ப பாடசாலையிற்கு அருகில் இறைக்கும் இல்லத்தின் நிர்மாணம் செயற்பாட்டில் உள்ளன. எவ்வாறாயினும் காணியின் உரிமையாண்மை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | அலோகா வைத்தியசாலை வளவு பிரதான இறைக்கும் இல்லத்திற்கு மேலதிக காணி வேண்டுகை சுவீகரிப்பு செயற்பாட்டில் உள்ளது. மஹாமய ஆரம்ப பாடசாலையிற்கு அருகில் பிரதான இறைக்கும் இல்ல நுழைவாயில் நீர்ப்பாசன திணைக்களத்திற்கான ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தெய்யன்னெவெலவில் இறைக்கும் இல்லம் விவசாய நிலமாக உள்ளது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் தாமதமில்லாமல் காணி உரிமையாண்மையை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |